Department of Health

Metformin Information: *Tamil*

# மெட்ஃபார்மின் தகவல்கள்

Great state. Great opportunity.

Queensland Government

*கர்ப்பகால சர்க்கரை நோய் (ஜெஸ்டேஷனல் டயாபெட்டீஸ் மெல்லிட்டஸ் (ஜிடிஎம்) என்பது தான், கருவுற்ற பெண்களில் கிட்டத்தட்ட 5-8 சதவீதம் பேர்களைப் பாதிக்கிற, கர்ப்பகாலத்தின் மிகவும் பொதுவான மருத்துவச் சிக்கல்களில் ஒன்றாகும். கர்ப்பகால சர்க்கரை நோயை (ஜிடிஎம்) மேலாண்மை செய்வது மற்றும் சிகிச்சையளிப்பதன் குறிக்கோள்கள் என்பவையே, தாயையும், அவரது சேயையும் பாதித்து விடக் கூடிய, கர்ப்பகால சர்க்கரை நோயின் (ஜிடிஎம்) பொதுவான சிக்கல்கள் சிலவற்றின் ஆபத்துக்களைக் குறைப்பதேயாகும்.*

## தாயிற்கான ஆபத்துக்கள்:

- தூண்டல் ஏற்படுவதற்கான அதிகரித்த ஆபத்து
- அதிகரித்த மகப்பேறு அறுவைச் சிகிச்சை விகிதம்
- வாழ்வின் பிற்பகுதியில் 2 ஆம் வகை சர்க்கரை நோய் தோன்றுவதற்கான அதிகரித்த ஆபத்து.

## சேயிற்கான ஆபத்துக்கள்:

- பிறப்பிற்கு முன்பே பெரிதானதாகவோ அல்லது கொழுப்பு மிகுதியானதாகவோ வளர்ந்து விடலாம்
- பிறப்பிற்குப் பிறகு குறைவான இரத்த குளுக்கோஸ் அளவுகள்
- சுவாசப் பிரச்சினைகள்
- உடல் வெப்பநிலையைப் பராமரிப்பதில் சிரமம்
- பாலூட்டும் பிரச்சினைகள்.

உங்கள் சேயின் இரத்த குளுக்கோஸ் அளவுகள் குறைவானவையாக இருந்தால், உங்கள் சேயை பிரத்தியேகக் கவனிப்பு மழலையர் மையத்தில் வைத்து கவனிக்க வேண்டியிருக்கலாம்.

கர்ப்பகால சர்க்கரை நோயை மேலாண்மை செய்வதன் குறிக்கோள்கள் என்பவை, உங்களுக்கான (தாய்) இயல்பான அளவிற்கு அருகில் இருக்கிற இரத்த குளுக்கோஸ் அளவுகளை அடைவதன் மூலம் இத்தகைய சிக்கல்கள் ஏற்படாமல் தடுப்பதேயாகும்.

நல்ல குளுக்கோஸ் கட்டுப்பாட்டிற்கான இலக்குகளை அடைய, உணவுமுறை ரீதியில் செய்கிற மாற்றங்களும், உடல் ரீதியிலான செயல்பாடுகளும் போதுமானதாக இல்லாத போது, தொடர்ச்சியான மேலாண்மைக்கு மருத்துவங்களைப் பரிசீலிப்பது அவசியமாகி விடுகிறது. கர்ப்பகால சர்க்கரை நோயுள்ள அனைத்துப் பெண்களிலும் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர், அவர்களது சிகிச்சையின் ஒரு பகுதியாக மாத்திரைகளையோ அல்லது இன்சுலின் ஊசிகளையோ உபயோகித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகளை மேம்படுத்துவதற்கு, மெட்ஃபார்மின் (டயாபெக்ஸ்) மாத்திரைகளை உபயோகிக்கத் துவங்குவதற்கு உங்கள் மருத்துவர் தேர்வு செய்திருக்கிறார். கர்ப்பகாலத்தின் போது இத்தகைய மாத்திரைகளை உபயோகிப்பதை மதிப்பீடு செய்கிற சமீபத்திய ஆய்வுகள், ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் செய்யப்பட்டிருக்கின்றன. மெட்ஃபார்மின் மருந்து, தாயின் இரத்த குளுக்கோஸ் அளவுகளைக் குறைப்பதில் திறனுள்ளதாகவும், தாயிற்கும் சேயிற்கும் பாதுகாப்பானதாகவும் இருந்ததாகவே அவ்வாய்வு காண்பித்தது.

மெட்ஃபார்மின் மருந்து, 2 ஆம் வகை சர்க்கரை நோயுள்ளவர்களுக்கு, நல்ல முடிவுகளோடு அநேக ஆண்டுகளாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலானவர்களுக்கு மெட்ஃபார்மின் மருந்தை எடுத்துக் கொள்வதில் எவ்விதப் பிரச்சினைகளும் இருக்கவில்லை ஆனால் பின்வருபவை போன்ற சில பக்க விளைவுகள் முதல் சில நாட்களில் இருக்கலாம்:

- குமட்டல்
- வாந்தி
- வயிற்றுப்போக்கு
- பசியின்மை
- இலேசான அடிவயிற்று அசௌகரியம்
- சுவை தொந்தரவு.

சிகிச்சையின் முதல் சில நாட்களில் இத்தகைய அறிகுறிகள் ஏதேனும் ஏற்படுகிற பட்சத்தில், பெரும்பாலான நிலைகளில் அவை தாமாகவே சரியாகி விடுகின்றன. இத்தகைய பக்க விளைவுகள் ஏற்படாமல் தவிர்ப்பதில் துணை புரிவதற்கு, மெட்ஃபார்மின் மாத்திரையை சாப்பாட்டின் போதோ அல்லது சாப்பாட்டிற்குப் பிறகோ - வெறும் வயிற்றில் அல்ல - எடுத்துக் கொள்வதே சிபாரிசு செய்யப்படுகிறது.

சீக்கிரமே தீர்வடையாத, தொடர்ந்து இருந்து வருகிற பக்க விளைவுகள் எதுவும் உங்களுக்கு இருக்குமானால், உங்கள் மருத்துவர் அல்லது சர்க்கரை நோய் கல்வியாளரிடம் தெரிவியுங்கள்.

உங்கள் உடல்நலக் கவனிப்புக் குழுவினர் வேண்டிக் கொள்கிறபடி, உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகளைத் தொடர்ந்து கண்காணித்து, மருத்துவம் எடுத்துக் கொள்வதனால் உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகள் மேம்படவில்லை என்றால் அதனை அவர்களுக்குத் தெரிவியுங்கள்.

## இலக்கு அளவுகள் என்பவை:

காலையுணவிற்கு முன் ..................................................

சாப்பாட்டிற்குப் பிறகு 1 மணி நேரம் ..................................................

சாப்பாட்டிற்குப் பிறகு 2 மணி நேரங்கள் ..................................................

## உங்கள் ஆரம்ப மருந்தளவு:

மெட்ஃபார்மின் 500 மில்லி கிராம்கள்______ மாத்திரைகள், ஒரு நாளுக்கு - ஆகாரத்தோடு எடுத்துக் கொள்ளுங்கள்

*மற்ற அறிவுறுத்தல்கள்:*

..................................................

..................................................

..................................................

மேற்கொண்டு மாற்றம் செய்வது எதுவும் அவசியமா என்பதைப் பார்த்துக் கொள்வதற்காக, மருத்துவம் எடுக்க ஆரம்பித்ததிலிருந்து 3-4 நாட்களுக்குப் பிறகு, உங்கள் மருத்துவர் அல்லது சர்க்கரை நோய்க் கல்வியாளரிடம் போய் தொடர் பரிசோதனை செய்து கொள்வது வழக்கமான ஒன்றேயாகும்.

நீங்கள் எடுத்துக் கொள்ள முடிகிற அதிகபட்ச மருந்தளவு என்பது, ஒரு நாளுக்கு 2,000 முதல் 2,500 மில்லி கிராம் வரையே ஆகும். இந்த அளவை அடைந்தும், உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவுகள் இலக்கு அளவுகளுக்குள் இல்லை என்றால், இன்சுலின் ஊசிகள் அவசியமாகலாம். இது உங்களோடு விவாதிக்கப்பட்டு, உங்கள் சிசுவைப் பெற்றெடுக்கு வரை உங்களுக்கு எவ்வளவு காலம் உள்ளது என்பதற்கும், சிசுவின் உருவ அளவிற்கும் உங்களுக்குப் பரிசீலனை கொடுக்கப்படும்.

**கேள்விகள் எதற்கும், தயவுசெய்து உங்கள் மருத்துவரையோ, சர்க்கரை நோய்க் கல்வியாளரையோ அல்லது மகப்பேறு உதவியாளரையோ தொடர்பு கொள்ளுங்கள்.**

**இவ்வுதவிகளை உங்கள் உடல்நலக் கவனிப்புக் குழுவினர் வழங்குகிற போதனையோடு சேர்த்தே உபயோகித்துக் கொள்ள வேண்டும்.**

© State of Queensland (Queensland Health) 2013

CC BY ND

http://creativecommons.org/licenses/by-nd/3.0/au/deed.en/

மேற்கொண்டும் தகவல்களுக்கு, Clinical Access and Redesign Unit, Department of Health-ஐத் தொடர்பு கொள்ளுங்கள், மின்னஞ்சல்: CARU@health.qld.gov.au, தொலைபேசி (07) 3646 9872.
இந்த உரிம ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கு அப்பாலான அனுமதிகளுக்கு: அறிவுசார் சொத்து அலுவலர், மின்னஞ்சல்: ip_officer@health.qld.gov.au, தொலைபேசி (07) 3328 9862.

Queensland Government